**செய்தி வெளியீடு எண்: 538** **நாள்:27.08.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை **26.8.2019** அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா அவர்கள் சந்தித்து, புதுடில்லியில் **23.8.2019** அன்று மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் சார்பில் நடைபெற்ற விருதுகள் வழங்கும் விழாவில், போஷன் அபியான் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக தமிழ்நாட்டிற்கு தேசிய அளவில் வழங்கப்பட்ட முதலிடத்திற்கான இரண்டு விருதுகள் மற்றும் இரண்டாம் இடத்திற்கான ஒரு விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

போஷன் அபியான் திட்டம் பல துறைகளின் ஒருங்கிணைப்புடன் இந்தியாவை ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத நாடாக உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் ஊட்டச்சத்து குறைபாடுகளான குள்ளத் தன்மை, எடைக் குறைவு, இரத்தச் சோகை மற்றும் பிறப்பு எடைக் குறைவு ஆகியவற்றை குறைப்பதற்கு இலக்குகளை நிர்ணயித்து குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கான செயல் திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டம், அங்கன்வாடி பணியாளர்களுக்கு பொது மென்பொருள் செயல்பாடு (CAS) செயலி பதிவேற்றம் செய்யப்பட்ட திறன் பேசிகள் மூலம் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் மற்றும் நிகழ்நேர கண்காணிப்பு, பயிற்சி மூலம் களப் பணியாளர் திறன்களை மேம்படுத்துதல், ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு எதிராக சமுதாய அணி திரட்டல், புதுமையான முறைகள், சலுகைகள், குறைகளை தீர்த்தல் மற்றும் களைதல், பல துறைகளின் ஒருங்கிணைப்பு பணிகள் மூலம் ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத நாடாக உருவாக்கும் நோக்கத்தை அடைய விழைகிறது.

**2018–19**ஆம் ஆண்டில் போஷன் அபியான் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்களுக்கு விருதுகள் வழங்கும் விழா புதுடில்லியில் **23.8.2019** அன்று மாண்புமிகு மத்திய மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில்

நடைபெற்றது. இவ்விழாவில், திறன் மேம்பாடு, ஒருங்கிணைப்பு மற்றும் நடைமுறை மாற்றம், சமுதாய நிகழ்ச்சிக்கு அனைவரையும் ஒன்று திரட்டுதல் ஆகியவற்றிற்காக தமிழ்நாட்டிற்கு தேசிய அளவில் முதலிடத்திற்கான விருது மற்றும் ஊக்கத்தொகையாக 1 கோடி ரூபாய்க்கான காசோலை, ஒட்டுமொத்த செயல்பாட்டில் சிறந்து விளங்கியதற்காக தேசிய அளவில் முதலிடத்திற்கான விருது மற்றும் ஊக்கத்தொகையாக 1 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் – பொது மென்பொருள் பயன்படுத்துவதில் தேசிய அளவில் இரண்டாம் இடத்திற்கான விருது மற்றும் ஊக்கத்தொகையாக 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டது. மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் விருதுகளை பெற்றுக்கொண்டார்கள்.

களப் பணியில் தலைமை மற்றும் ஒருங்கிணைப்பு விருதில், மாநில அளவில் விருது பெற்ற நீலகிரி மாவட்டம் சார்பில், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு.பி. பாபு, துணை இயக்குநர் (சுகாதாரம்) டாக்டர் எஸ். பொற்கொடி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் மாவட்ட திட்ட அலுவலர் திருமதி டி. தேவகுமாரி ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

களப் பணியில் தலைமை மற்றும் ஒருங்கிணைப்பு விருதில், வட்டார அளவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கிள்ளியூர் வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, விருதுக்கான சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டன. இவ்விருதுக்கான சான்றிதழ் மற்றும் பதக்கத்தை கிள்ளியூர் வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி வி. ஜெயந்தி மற்றும் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் எம். ரமா மாலினி ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

களப் பணியில் சிறந்த அணிக்கான (அங்கன்வாடி பணியாளர், அங்கன்வாடி உதவியாளர், கிராம சுகாதார செவிலியர் மற்றும் அங்கன்வாடி மேற்பார்வையாளர்) விருதினை இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருவாடானை வட்டாரமும், விழுப்புரம்

மாவட்டத்தில் உள்ள சின்னசேலம் வட்டாரமும் பெற்று இதற்கான விருது மற்றும் ஊக்கத் தொகையாக தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை இரு அணிகளும் பெற்றன.

இவ்விருதுகளை பெற்ற திருவாடானை வட்டார அங்கன்வாடி பணியாளர் திருமதி ஆர். சிவானந்தவள்ளி, அங்கன்வாடி உதவியாளர் திருமதி என். சாந்தி, கிராம சுகாதார செவிலியர் திருமதி பி. சௌந்தரவள்ளி, அங்கன்வாடி மேற்பார்வையாளர் திருமதி ஆர். புவனேஸ்வரி ஆகியோரும், சின்ன சேலம் வட்டார அங்கன்வாடி பணியாளர் திருமதி ஏ. காந்திமதி, அங்கன்வாடி உதவியாளர் திருமதி ஆர். அஞ்சலி தேவி, கிராம சுகாதார செவிலியர் திருமதி வி. மகாலட்சுமி, அங்கன்வாடி மேற்பார்வையாளர் திருமதி ஏ. சாந்தி ஆகியோரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

மேலும், மாநில அளவில் மூன்று மாவட்டங்கள் மற்றும் 10 வட்டாரங்கள் போஷன் அபியான் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்கான விருதினை பெற்றுள்ளன. சிறந்த மூன்று மாவட்டங்கள் மற்றும் 10 வட்டாரங்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. சிறந்து விளங்கிய 147 அணிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஊக்கத் தொகை மற்றும் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, இ.ஆ.ப., ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்குநர் செல்வி கவிதா ராமு, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**